# அமிர்தா பொறியியல் பள்ளியில் அனோஹா தொழில்நுட்ப திருவிழா

**கோவை, பிப். 19-**

இந்தியா வின் உயர்மட்ட பொறியியல் கல்லூரிகளுடன் அமெரிக்கா, இந்தோனேசியா, காமரூன், மொராக்கோ மற்றும் எகிப்து உள்ளிட்ட நாடுகளின் பல் கலைக்கழகங்களை சேர்ந்த 15,000 க்கும் மேற் பட்ட சிறந்த மாணவர்கள் பங்கேற்கும் அனோஹா 2016 எனும் அமிர்தா பொறியியல் கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப திருவிழா கோவைல் பிப். 18ம் தேதி முதல் 20ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அமிர்தா பல்கலைக்கழகத்தின் அமிர்தா பொறியியல் கல்லூரியின் இயக்குனர் பரமேஸ்வரன் மற்றும் டீன் டாக்டர் சசாங்கன் ராம நாதன் ஆகியோர் கூறியதாவது :

இந்தியா மட்டுமல்லாது உலக அளவிலான தொழில்நுட்ப மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த ஊக்குவிக்கும் வகையில் செயல்படுவதே அனோஹாவின் நோக்கமாகும். இந்த தொழில்நுட்ப திருவிழா வெறும் ஐந் தாண்டுகளிலேயே மிகவும் உயர்ந்ததாக கருதப் படுகிறது. பொறியியல் மாணவர்கள் தங்களின் கண்டுபிடிப்புகள், புத்தி கூர்மை, குழுப்பணி மற்றும் திறமையை வெளிப்படுத்த அனோஹா 2016 சிறந்த வழியாக இருக்கும் என்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

பெங்களூர் டொயோட்டா இண்டஸ்ட்ரீஸ் எஞ்சின் இந்தியா நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குனரும், இயக்குநர் குழு உறுப்பினரு



மானடி.பி.பரசுராமன் துவக்க விழாவில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைக்கவுள்ளார்.

மூன்றுநாட்கள்நடைபெறும்இந்நிகழ்ச்சியில் 24 பட்டறைகளும் 75 போட்டிகளும் நடைபெறுகிறது. இதில் மாணவர் களுக்கு ரூ.15 லட்சத்திற்கான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் இந்நிகழ்ச்சியானது ஐக்கிய நாடுகளின் நிலை யான தொழில்நுட்ப மேம்பாடு எனும் இலக்கை அடிப்படையாக கொண்டு நடைபெறும். மேலும் வேறுபட்ட துறையை சேர்ந்த பேச்சாளர்கள், ஐஏஎஸ் அதிகாரி ஆரம்ஸ்ட்ராங் பாம், நுடுகு சுற்று சூழல் ஆர்வலர் மற்றும் நிறுவனர் அருண் கிருஷ்ணமூர்த்தி, நீ ச்சல் வீரர் பக்தி சர்மா, ருஜ பொறியியல் வல்லுநர் மற்றும் ராக்ஸ்டார் ஹரிஷ் சிவராமகிருஷ்ணன், பன்யான் நேஷன் நிறு வனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மணி மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவன முன்னாள் வடிவமைப்பு ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் ஆகி யோரும் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர் என்றனர்.